செ.வெ.எண்: 52/2021 நாள்: 24.08.2021

# நடப்பு காரீப் பருவ பயிர்களுக்கு திருந்திய பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் மூலம் விவசாயிகள் காப்பீடு செய்ய 31.08.2021-ஆம் தேதி கடைசி நாள் விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் அழைப்பு!!!

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு காரீப் பருவப் பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்..வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளுக்கு நிதியுதவி வழங்கி பாதுகாக்கவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதை ஊக்குவிக்கவும், தமிழ்நாட்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் காரீப் 2016 முதல் சென்னை நீங்கலாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மத்திய அரசு 2020 ஆம் ஆண்டு முதல் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சில மாற்றங்களை செய்து, புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. முக்கியமாக இத்திட்டத்தின் கிழ். கடன் பெறும் விவசாயிகளை கட்டாயமாக பதிவு செய்து வந்த நிலையில் தற்போது அவர்களின் விருப்பத்தின் பேரில் பதிவு செய்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்டவாரியான பயிர்வாரியான சராசரி மகசூலின் அடிப்படையில் காப்பீட்டுத் தொகை நிர்ணயிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்திற்கு திருந்திய பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் காரீப், 2021-ல் செயல்படுத்த அரசாணையின் படி அக்ரிகல்ச்சுரல் இன்சுரன்ஸ் கம்பனி ஆப் இந்தியா லிமிடெட்(AICL) காப்பீட்டு நிறுவனமாக தமிழக அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

காரீப் பருவத்தில் மக்காச்சோளம், சோளம், நிலக்கடலை மற்றும் பருத்தி போன்ற வேளாண் பயிர்களும் வாழை, மரவள்ளி, வெங்காயம், மஞ்சள் மற்றும் தக்காளி, போன்ற தோட்டக்கலைப்பயிர்களும் அறிவிக்கை செய்யப்பட்டு விவசாயிகள் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதற்கான காலக்கெடுவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே காரீப் பருவத்தில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், தாங்கள் பயிர் கடன் பெறும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலமாக அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ தங்கள் விருப்பத்தின் பேரில் அறிவிக்கை செய்யப்பட்ட

பயிர்களை காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெறா விவசாயிகள் நடப்பு பசலி ஆண்டுகளுக்கான அடங்கலை கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்றுஅதனுடன் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலோ அல்லது தேசிய வங்கிகளிலோ சென்று பதிவு செய்துக் கொள்ளலாம்.

எனவே விவசாயிகள் இயற்கை நிகழ்வுகள் ஏற்படும் முன் இத்திட்டத்தில் தங்களது பயிர்களை காப்பீடு செய்துக் கொள்ளவும், இதுகுறித்தான மேலும் விபரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநரையோ அல்லது வேளண்மை அலுவலரையோ அல்லது உதவி வேளண்மை அலுவலரையோ தொடர்பு கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் மக்காச்சோளம், சோளம், நிலக்கடலை மற்றும் பருத்தி பயிர்களுக்கு காப்பீடு செய்ய கடைசி நாள் 31.8.2021, வெங்காயம் மற்றும் தக்காளி பயிர்களுக்கு காப்பீடு செய்ய கடைசி நாள் 31.08.2021, மஞ்சள், வாழை மற்றும் மரவள்ளி பயிர்களுக்கு காப்பீடு செய்ய கடைசி நாள் 15.09.2021 எனவே விவசாயிகள் இயற்கை சீற்றங்களால் பயிர்களுக்கு ஏற்படும் மகசூல் இழப்புகளிலிருந்து பாதுகாத்திட தாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்களை அரசு நிர்ணயத்த காலக்கெடு தேதிக்கு முன்னரே காப்பீடு செய்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கூடுதலாக பயிர் காப்பீட்டு விவரங்களை தங்கள் செல்லிடப்பேசியில் உள்ள உழவன் செயலி மூலம் தெரிந்துகொள்ளலாம் என திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்எஸ்..வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**